DBCY publication போஸ்கோ இலக்கிய இதழ்

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 41-47

ISSN :XXX-XXXX

# தமிழர் வழிபாடுகளில் பண்பாட்டுக் கூறுகள்

**முனைவர் அ.குமார்**

**உதவிப்பேராசிரியர்**

**தமிழ்த்துறை**

**தொன்போஸ்கோ கல்லூரி**

**ஏலகிரிமலை**

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைகாலம் தொட்டு தமிழர்கள் தெய்வத்தின்மீது நம்பிக்கை கொண்டிருந்தனர், தமிழர்களின் வாழ்வியலில் இருக்கும் தெய்வங்கள் சிறு தெய்வமாகவும், பெருந்தெய்வமாகவும் இருந்து. காலப்போக்கில் தமிழர்களின் கலாச்சாரத்தில் பல்வேறு மதங்கள் வந்து சேர்ந்தது. இதனிடையே ஏற்பட்ட கலாச்சார மாறுதல்கள் தங்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதை அறிவோம். தெய்வத்திற்கு பெரும் வழிபாடுகள் அரசர்களின் வழிகாட்டுதலோடு நடத்தப்பட்டது. அது உயர்குடி மக்களின் நிரந்தர சொத்தாக மாறியது, அதை அப்படியே பின்பற்றியும் வந்தார்கள் என்பது எதார்த்தம். அந்த வகையில் கோவில்கள் உருவாக்கப்பட்டு தெய்வங்களின் மதிப்பு கூட்டப்பட்டு சமூகத்தின் விளிம்புநிலையில் உள்ள மக்களின் வழிபாட்டுக்கு தடையாக இன்று வரையிலும் உள்ளது.

சமூகத்தின் பிளவுக்கு காரணமாக அமைந்தவை கோவில் மற்றும் வழிபாடும் என்பதாகும், ஆனால் இறை நம்பிக்கை என்பது எல்லோருக்கும் பொதுவானது மக்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களுக்கு இறைவனை நாடுகின்றார்கள் இறைவனின் கருணை மக்களுக்கு கிடைக்கவேண்டும் என்பதற்காக மக்கள் தங்களின் நம்பிக்கையை தெய்வத்தின் மீது வைத்து நலமாக வாழ்வதற்கு விரும்புகிறார்கள், இன்று வரையிலும் தமிழர்களின் வாழ்வில் இறை நம்பிக்கை நிரந்தரமாக இருந்துகொண்டு வருகிறது. தமிழ்ச்சமூகம் இன்றுவரையிலும் பண்பாடு மற்றும் கலாச்சாரத்துடன் வாழ்வதற்கு தெய்வ வழிபாடு என்பது இன்றியமையாததாக உள்ளது.

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 41-47

ISSN :XXX-XXXX

இன்றும் முன்னோர்கள் வகுத்து வைத்த தெய்வ வழிபாடுகளில் இன்றும் பூஜைகள் நடைபெறுவதை எதார்த்த வாழ்க்கையில் பார்க்கின்றோம். நம்பிக்கை சார்ந்த தெய்வ வழிபாடு மக்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்துள்ளது என்பதனை மறுக்கமுடியாது, ஆனால் தமிழர்கள் என்கின்ற அந்த ஒற்றை வார்த்தையில் சாதியாக, மதமாக இன்றும் பிரிந்துகிடப்பதற்கு இந்த வழிபாட்டு முறையும் ஒரு காரணமாக அமைந்தது. எல்லோர்க்கும் ஓர் தெய்வம் எல்லோருக்கும் ஒரு வழிபாட்டு முறை என்பது தமிழர்களின் வழிபாட்டு முறை உருவாகி பெருக்கெடுத்து மக்கள் மனங்களில் சென்றடையும்போது மனங்களில் தமிழர்களின் வழிபாட்டு முறை சிறப்பானதாக அமையும்.

**சொற்கள்**

1) புரிந்துணர்வுகள்
2) பரிமாணங்கள்
3) இரவை கிழித்திற்று
4) வாசப்படியில் குத்தவைத்துக்கொண்டு
5) சாஸ்தாவுராயன்

**முன்னுரை**

சங்க காலத்திலிருந்து இன்றுவரை தமிழர்கள் ஒருமித்த பண்பாட்டோடு பயணித்து வருகின்றது என்பதற்கான ஆதராரமாக இலக்கியங்கள் அமைந்திருகின்றன. சடங்குகள் வாயிலாக உருவாக்கப்படும் வழிபாடுகள் இன்றும் தமிழர்களிடையே உள்ள பண்பாட்டுக் கூறுகள் இன்றும் வாழ்வோடு விரவிகிடக்கின்றன என்பதை கூறும் வண்ணம் இக்கட்டுரை ஆராய்கின்றது.

**பண்பாடு - விளக்கம்**

சமூக இயல் அறிஞர்களின் (Social Scientists)கருத்தின்படி, பண்பாடு என்பது, வாழ்க்கை முறை (way of life)என்பதாகும். ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் ஒரு பண்பாடு உண்டு. ஒரு சமுதாயத்தில் வாழுகின்ற பெரும்பான்மை மக்களின் ஒருமித்த நடத்தைகளையும்

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 41-47

ISSN :XXX-XXXX

எண்ணங்களையும் அது வெளிப்படுத்தும். ஒரு சமுதாயத்தில் அமைந்துள்ள கலை, நம்பிக்கை, பழக்க வழக்கங்கள், மொழி, இலக்கியம், விழுமியங்கள் (Values)முதலியன அந்தச் சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகள் எனப்படும்.[1]

பண்பாடு என்பதற்கு பல பரிமாணங்கள் உண்டு. அவ்வாறே, பண்பாட்டிற்குப் பல நிலைகளில் வரையறை உண்டு. பண்பாடு என்பது ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், அறிவுப் பரம்பல்கள், வாழ்வியல் வழிமுறைகள், சமூகக் கட்டமைப்பு என்பவற்றைச் சுட்டி நிற்கின்றது.[2] மொழி, இசை, சமய நம்பிக்கைகள், தொழில்சார் தெரிவுகள்,கருவிகள் போன்றவையும் பண்பாட்டிற்குள் அடங்குகின்றன. இவை யாவற்றில் இருந்தும் பண்பாடு என்பது நம்முடைய அடையாளங்களின் பழைமை என்பது பெறப்படுகின்றது. இக்கட்டுரை,பாரதிபாலன் கதைகள் சித்திரிக்கும் வழிபாட்டின் வழியே பெறப்படும் பண்பாட்டுச் சிறப்பை எடுத்துரைக்கப்படுகிறது.

**தெய்வ வழிபாட்டின் வழியே அறியலாகும் பண்பாடு**

கிராமிய அல்லது நாட்டுப்புறச் சமயமானது நிறுவனமயமாக்கப்பட்ட சமயத்துக்கு மாறானதாகும். கிராமிய சமுதாயத்தில் இந்து, கிறித்தவம், இசுலாமியம் என்ற பாகுபாடுகள் அதிகமில்லை. கிராம மக்களிடம் சமயப்பொறை உண்டு. அவரவர் சமயத்தைச் சாராத கோவில்களுக்கும் மக்கள் சென்று வழிபடுவதை கிராமப்புறங்களில் அதிகம் காணலாம்.

‘‘ஊர்வலம் நெருங்கிவிட்டது! தேவமார் தெருவில் கொட்டுச் சத்தம் நெருங்கிவிட்டது! அடுத்துப் பிள்ளையார் கோவில் வாசலில் சற்று நிற்கும் புஸ்புஸ்வென்று வாணவேடிக்கை! சீறிச் சீறிப் பாய்ந்து ஆகாசத்தில் போய் வெடித்திற்று! வெடித்துப் பூ பூவாய் மலர்ந்து இரவைக் கிழித்திற்று! காத்திருந்து காத்திருந்து அரைத்தூக்கம் முக்காத் தூக்கத்தில் விழுந்ததெல்லாம் திடுக்கிட்டு எழுந்தன. ஜன்னல் திறக்கிற சப்தமும், கதவை விலக்குகிற சப்தமும் கேட்டது. தெருவில் இரண்டொரு பேச்சுக் குரலும் கேட்டது. இன்னமும் பிள்ளையார் கோவிலுக்கே வரலெக்கா சத்தம் கேட்டுச்சு தேவமாரு தெருகிட்ட வரும் நிலையில் சாய்ந்து கொண்டும், வாசல்படியில் குத்தவைத்துக் கொண்டும் பெண்கள்! ஒன்றிரண்டு பேர் தெருவில் உலாத்திக் கொண்டிருந்தார்கள் நடுச்சாமக் காற்றும் தவழத் தொடங்கிற்று! நன்றாக உறங்கியவர்கள் கூட மலங்க மலங்க விழித்துக்கொண்டு தெருவில் நின்றார்கள். வந்து விட்டது! முதலில் ஒரு

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 41-47

ISSN :XXX-XXXX

சிறுசுகள் கூட்டம்! கூச்சல் போட்டுக் கொண்டு ஓடி வந்தது"[3] என்று திருவிழாவை காண வரும் கூட்டத்தையும் திருவிழாவையும் சித்திரிக்கிறார்.

தெய்வம், கடவுள், இறைவன், ஆண்டவன், தேவதை, சூர், அணங்கு போன்ற சொற்கள் இறைப்பொருள் ஒன்றையே சிறிது ஆழ அகல வேறுபாடுகளுடன் சுட்டுகின்றன. பழங்கால சமயம் ஒருவித சக்தியை நம்பியது. இச்சக்தி நல்லதை நிகழ்வித்தால் தெய்வம் என்றும் கேட்டினைப்புரிந்தால் பூதம் என்றும் எண்ணினார். தெய்வத்துக்கும் வழிபடும் பூதத்திற்கும் தணிக்கையும் செய்தனர்.[4]கிராம மக்கள் தெய்வங்களைத் தேவதைகள் தேவாதிகள் எனக் குறிப்படுவதைக் காணமுடிகிறது.

கிராமத் தெய்வ வழிபாடானது மிகவும் தொன்மை வாய்ந்தது. பெருந்தெய்வ வழிபாடு தோன்றும் முன்னரே சிறுதெய்வ வழிபாடு தோன்றியிருக்க வேண்டும். கிராமத் தெய்வங்களாகச் சிறு தெய்வங்களை மட்டுமே கொள்ளவியலும்.

‘‘சாஸ்தாவுராயன் கம்பீரமான வெள்ளை யானை மீது இருந்தார். பட்டுப்பரிவட்டடும், மலர மலர மாலைகளுமாகக் காட்சி தந்தார். பக்கத்திலே கருப்பசாமி திருதிருவென்று விழி உருளும் கண்கள் கையில் வெட்டருவாள். பிடறி சிலிர்க்கும் குதிரை, குழந்தைகள் கண்டால் அலறிவிடும். இந்த இருவருக்கும் நடுவில் கன்னிமார்கள் பட்டுப் பாவாடையும் பளபளக்கும் கண்ணுமாக இருந்தனர். உசிரோடு இரண்டு உருவங்கள் நிற்பது மாதிரிதான் இருந்தது! எல்லாம் குசச்செட்டியாரின் கைவாகு! கைவாகா? மனவாகா? எப்படி அறிவது!

‘‘அச்சு அசலா பண்ணியிருக்கார்.”

எங்க பயலுகளுக்கு இன்னிக்குக் காசு பணம் இருக்கலாம். துணியாவாரம், ஆட்டுத்தோல் யாவாரம்னு காசு பாத்திருக்கலாம். நாம மனுஷ மக்களத்தானய்யா பாக்கணும். இருபத்திநாலு மனைச்செட்டியாருக்கும் குசச் செட்டியாருக்கும் என்ன சம்பந்தம்? ஒங்க புள்ள மாருங்க தெருவுலெ பரமுபுள்ள இருந்தார். அவருக்காவண்டிதேன் சாமிய அங்கிட்டு கொண்டு போவுது. அப்புறம் மூக்கை யாத் தேவர்! இந்தப் பந்தல் செலவு மூச்சும் அவருதேன் அங்குட்டு குடும்பமார் அவுங்க தோட்டத்து வாழைங்கதானே இதெல்லாம்! துட்டுக் கொடுத்தா தொடமாட்டேனுட்டாங்களே… அன்று மாலை முளைப்பாரி ஊர்வலம். இன்றோடு திருவிழா

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 41-47

ISSN :XXX-XXXX

முடிகிறது. திருவிழாதானே முடிகிறது! ஒவ்வொரு நாளையும் திருவிழாவாக்கிக்க முடியாதா? மனசுதான். நிலா தகதகவென்று இருந்தது."[5] என்று திருவிழாவின் மேன்மையை எடுத்துகாட்டுகிறார் பாரதிபாலன்.

சிறு தெய்வமானது சாதாரண மக்களுக்கானதாக, பிராமணரல்லாத சாதாரண மக்களே பூசாரியாக உயிர்ப்பலியிட்டு வழிபடக்கூடியதாக, மனிதர்மீது இறங்கி ஆடுவதாக, கல்லில்மட்டுமின்றி, பிற பொருட்கள்மீதும் உறைவதாக அமைந்திருக்கும். எனவே சிறுதெய்வங்களே கிராம தெய்வங்கள் என்பதில் ஐயமில்லை. நாட்டுப்புற அல்லது கிராமியத் தெய்வங்களை, ஊர்த்தெய்வங்கள், இனத் தெய்வங்கள், குலத் தெய்வங்கள், மாலைத் தெய்வங்கள், சமாதித் தெய்வங்கள், துணைத் தெய்வங்கள்[6] என ஆறாக வகைப்படுத்துகின்றார் அறிஞர் துளசி இராமசாமி. இந்தக் கோயில்கள் எளிமையாக இருக்கும். இந்தன்மையை,

‘‘அந்தத் தெருமுனையில் ஒரு விநாயகர் கோவில். கோவில் என்றால் கட்டிடம் இல்லை. சுற்றுச்சுவர் இல்லை. கணகணவென்று அலறும் மணி இல்லை. இடுப்பு அளவு பீடம். செம்மண்ணும் வெள்ளைச் சுண்ணாம்பும் பூசிய பீடம். நடுவில் ஒரு அரசமரம். அதன் அடியில் விநாயகர். எதிரில் பெருச்சாளி வாகனம். இடதுபக்கம் சிறு விளக்குத் தூண். கரேல் என்று எண்ணெய்ப் பிசுக்காக இருக்கும். தினமும் அந்தப் பீடத்தைத் தெய்வானைத்தான் கூட்டிச் சுத்தம் செய்வாள்."[7] என்று கிராமத்தின் கோயில்களின் எளிய தன்மையை எடுத்துக்காட்டப்படுகிறது. கிராமத்துக் கோயில்கள் மட்டுமன்றி,

‘‘மாரியத்தாளுக்கு மாவிளக்கு எடுத்து ஊர்சுற்ற வரும்போதும் சரி, முளைப்பாரி தூக்கி வரும்போதும் சரி முனியப்பிள்ளை மகள்களைத் தான் முன்னாடி விடுவார்கள். அழகு மட்டும் அதற்குக் காரணமில்லை. குணமும் அப்படி. எல்லோரிடமும் இனிக்க இனிக்க பேசுவார்கள் மதினிக்கு இந்தக் கத்தரிப்புக் கலர் ஜோரா இருக்கு! அண்ணே இன்னைக்கு வெள்ளனமே வந்தீட்டீக போலெ… என்ன சின்னய்யா மேலுக்குச் சேட்டமில்லையா? யக்கா ஒரு வடியா இருக்கீகளே.. எல்லோரிடமும் பிரியத்தைக் கொட்டிக் கொண்டிருப்பார்கள். முகம் பார்த்துச் சிரித்தால் மட்டும்போதாது நாலு வார்த்தை பேசிவிட்டு நகர்ந்தால்தான் நிம்மதி உருகி உருகிப் பேசுவார்கள். வாய் வார்த்தை இல்லை. மனசு தோய்ந்து பேசும் பேச்சு அது! அந்தப் பேச்சு

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 41-47

ISSN :XXX-XXXX

எல்லோருக்கும் பிடிக்கும். கலப்பு இல்லாத பேச்சு!"[8] என்று கிராமத்து மனிதர்களின் பண்பாடும் சேர்ந்தே கதைகளில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

“கடா மீசையும் பிடறிச் சிலிர்க்கின்ற குதிரையுமாய் நிற்கும் ஐயனார் கோவில். கோழி இறகும் ரக்கக் கறையுமாய் கிடக்கும் கிர் கிர் ரென்று அடித்து மோதுகின்ற காற்றில் வேலிக் கீற்று முணங்கும். அந்தக் கோவிலுக்குச் சுப்பு பண்டாரம்தான் பூசாரி பட்டை பட்டையாய் விபூதிக் கீற்று பளபளக்கும். வாய் ஏதாவது மந்திரத்தை முணுமுணுக்கும். அந்த வேகத்தில் வார்த்தைக்கு அர்த்தம் இருக்காது. அவர் மனமும் அதில் இருக்காது"[9] என்று கிராம பூசாரியை அடையாளம் காட்டுகிறது.

“அந்தக் கதாநாயகன் - முருகக் கடவுள் ஆளுயர மாலையணிந்த அந்த முருகக் கடவுள் எனக்குப் பட படப்பாயிற்று நான் அவன் முகத்தைப் பார்க்கிறேன் பால் முகம் பட்டை பட்டையாய் விபூதிக் கீற்று, தலையில் பளபளப்பான கிரீடம் தலை உரசும் பூமாலை ஜிவ்வென்று மணக்கிற பூமாலை இடது கையில் வேலாயுதம் திரையை விலக்கிக் கொண்டு வேமாக நடந்து வந்தான் பால் பொங்குகிற வேகம் ஆவுடையப்பன் முன் நின்று கை குவித்து தலை தாழ்த்தி வணங்கினான் கிரீடம் சிதறி விழுந்திற்று “குத்தம் குறை இருந்தா மன்னிச்சிடு… தாயே!” அந்த முருகக் கடவுள் ஆவுடையப்பன் காலைப் பிடித்துக் கொண்டது எனக்கு திக்கென்றது. சூசனும் திடுக்கிட்டாள் ‘என்ன இது?’ என்பது போல் பீதியுடன் என்னைப் பார்த்தாள். எனக்கு என்ன சொல்லுவது என்று ஒன்றும் புரியவில்லை என்ன சொல்லுவது?"[10] என்று தெய்வ நம்பிக்கையைக் கேள்விக்குறியாக்கிவிடும் தன்மையையும் ஒருங்கே தன்னுடைய கதையில் பாரதிபாலன் எடுத்துக்காட்டுகிறார்.

**தொகுப்புரை**

இலக்கியத்தரம் என்பது நமது மண் சார்ந்தும் மக்களின் மொழி சார்ந்தும் நமக்கே உரிய பண்பாட்டு மரபின் தொடர்ச்சியாகச் சமகால வாழ்வினைப் பார்ப்பதும், பல்வேறு பரிமாணங்களில் அவற்றைப் பகிர்ந்து கொள்வதும் வாசகன் அதனை எளிதாக உள்வாங்கி, தன் உள் உணர்வின் வாயிலாகப் புதிய சித்திரங்களைக் கண்டுணர்வதும் பண்பாட்டின் சிறப்பு ஆகும். படைப்பின் தன்மையை, அது விளைந்த நிலத்தின் தன்மையிலோ, அதன் அடி ஆழ அகலங்களைப்

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 41-47

ISSN :XXX-XXXX

படைப்பாளன் வழி உள்வாங்கி தங்கள் அறிவின் வெளிச்சத்தின்படி புற செய்திகளை முன் நிறுத்தி ஒரு படைப்பாளனை அணுகுகின்றபோது அப்படைப்பு அவர்களுக்கு ஏமாற்றம் தரும் வகையில் அமைந்துள்ளது என்பது பாரதிபாலன் கதைகளால் அறிய முடிகின்றது.

**முதன்மை நூல்**

பாரதிபாலன், பாரதிபாலன் கதைகள், சந்தியா பதிப்பகம், சென்னை -83 முதற்பதிப்பு,2008.

**சான்றெண் விளக்கம்**

1. மா. சுந்தரபாண்டியன், பண்பாட்டுப் பொருண்மைகள், ப.158.
2. கழகத் தமிழ் அகராதி, ப.531.
3. பாரதிபாலன், பாரதிபாலன் கதைகள், ப.581.
4. சு.சண்முகசுந்தரம், திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புற பாடல்களில் சமுதாய அமைப்பு, ப.210.
5. பாரதிபாலன், பாரதிபாலன் கதைகள், ப.581.
6. துளசி.இராமசாமி, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், ப.158.
7. பாரதிபாலன், பாரதிபாலன் கதைகள், ப.501.
8. மேலது.,ப.505.
9. மேலது.,ப.283.
10. மேலது.,பக்.167-168.